
தூது
நற்செய்தி துணுக்குகள்
25 Years
2000
2025
CSI Tamil Parish - Abu Dhabi
ஏப்ரல் – 2025
(மடல் - 25) செய்தி – 4
"அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்." [மத்தேயு 28:6]

# பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 10 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |

# ஆயர் மடல்

**“அவர் இங்கே இல்லை. தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்.” [மத்தேயு 28:6]**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்த மாதத்தில் நமது Convention & Retreat சிறப்பாக நடைபெற கிருபை செய்த ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். உற்சாகமாகப் பங்குப்பெற்ற உங்கள் யாவருக்கும் நன்றி செலுத்துகிறேன். வருகின்ற ஈஸ்டர் பண்டிகை நமக்கு மகிழ்ச்சியான காலமாகக் காணப்பட கர்த்தர் கிருபை செய்வாராக.

நான்கு நற்செய்தி நூலின் ஆசிரியர்களும் இயேசு கிறிஸ்துவின் பாடு. மரணத்தோடு நற்செய்தியை முடிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத் தங்களின் நூல்களுக்குச் சிகரமாக வைத்திருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பூலோக வாழ்வின் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிலுவை மரணத்தோடு நிறைவு பெற்றிருந்தால், அது உலகிலேயே நிகழ்ந்த மிகப் பெரிய சோக நாடகமாக இருந்திருக்கும். இவ்வுலகத்திற்கு அப்பால் ஞானமும் அன்பும் உள்ள ஒரு இறைவன் இருக்கிறார் என்பதற்குப் பொருளில்லாமல் போயிருக்கும். ஆனால் இயேசுவின் பூலோக வாழ்வின் நிகழ்ச்சி சிலுவையோடு முடிவடையவில்லை. இயேசுவின் உயிர்ப்பு சிலுவையின் பொருளை வெளிப்படுத்தும் ஒரு தொடர் நிகழ்ச்சி. இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த மீட்பின் செயல்திட்டம் அவரின் உயிர்ப்பில் நிறைவு பெறுகிறது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு வழியாக மனுக்குலத்திற்குக் கிடைத்த வெற்றியை ஏற்கமுடியாத சாத்தான், பொய்யான பிரசாரத்தில் ஈடுபடுகிறான். கிறிஸ்துவின் சரீரத்தைச் சீடர்கள் வந்து தூக்கிச் சென்றுவிட்டார்கள் என்றனர். (மத் 28:11-15) ஆனால் கல்லறை மிகுந்த கவனத்தோடு காவல் காக்கப்பட்டது. (மத் 27:61-66) அதோடு பயந்துபோய் இருக்கின்ற சீடர்கள் போர்ச் சேவகர்களை மேற்கொள்வது கூடாதக்காரியம். எல்லாவற்றிற்கும் மேலாக சீடர்களே இயேசு உயிர்த்தெழுவார் என்று எதிர்பார்க்கவில்லை. எனவே, இயேசுவின் சரீரத்தைச் சீடர்கள் எடுத்துச் செல்ல சாத்தியம் இல்லை. என்றாலும் சாத்தானின் பொய்யான செய்தியை முறியடிக்க உயிர்த்த இயேசுவை நேரடியாகப் பார்த்த சான்றுகளை (ருவைநௌள) நற்செய்தி ஆசிரியர்கள் முன்வைக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து எப்பொழுது, எப்படி உயிர்த்தெழுந்தார் என்பதை நற்செய்தி ஆசிரியர்கள் குறிப்பிடவில்லை. ஆனால் அதிகாலை வேளையில் உயிர்த்தெழுந்திருக்கவேண்டும். (லூக்கா 24:1) வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் தாங்கள் ஆயத்தம் பண்ணிய சுகந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு யார் நமக்காகக் கல்லறையின் கல்லைப் புரட்டுவார்கள்? என்ற கவலையோடு வந்த பெண்களுக்குக் ***கல்லறை திறந்திருப்பதையும் இயேசுவின் சரீரம் அங்கு இல்லாததையும் கண்டு அதிர்ச்சியுற்றார்கள்.*** அதோடு உயிரோடு இருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார் என்கிற தூதர்களின் சத்தத்தையும் கேட்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து கல்லறையிலிருந்து வெளியே வருவதற்காக வாயிலின் கல் புரட்டப்படவில்லை. ஏனெனில் பூட்டிய வீட்டிற்குள் செல்லுகிற இயேசுவுக்கு மூடப்பட்ட கல்லறையில் இருந்து வெளியே வருவது எளிதான காரியம். ஆனால் கல்லறை காலியாக இருப்பதை நாம் கண்டு விசுவாசிக்கவே வாயில் கல் புரட்டப்பட்டது. காலியானக் கல்லறை இயேசு உயிரோடிருக்கிறார் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் (மத் 28:6) என்பதைத் தொடர்ந்து, இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை ***போய்ச் சொல்லுங்கள்*** என்கின்ற கட்டளையும் கொடுக்கப்படுகிறது. (மத்தேயு 28:7). இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை நாம் நமக்குள்ளாகவே வைத்துக் கொள்ளாமல் அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ஈஸ்டர் பண்டிகையின் நோக்கமும் அதுதான் பண்டிகையின் ஆசீர்வாதங்களை ஆண்டவர் நமக்குக் கொடுப்பாராக.

கர்த்தர் உங்களையும், உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
**Rev. Dr. A. Samuel**



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், காத்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த காலங்கள் முழுவதும், ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக, ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபைசெய்வாராக.

***மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. ரோமர் 6:9***

***மரணம்*** என்ற சொல்லை யாருமே விரும்புவதில்லை. எல்லா மனிதர்களும் இயன்றவரை மரணத்தை தள்ளிப் போடுவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் இவ்வுலகில் மரிப்பதற்காகவே பிறந்தவர் நம் அருள் நாதர் இயேசு கிறிஸ்து மட்டுமே. மரணம் தமக்கு முன் குறிக்கப்பட்டது என்பதையும், அதுதான் பிதாவின் சித்தமாக இருக்கிறது என்பதாலும் மரணத்தை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறார்.

மனுக்குலம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே இறைவனோடு நல்லுறவு கொண்டு நித்திய காலமாய் வாழ்ந்திருப்பதற்காகத்தான். ஆனால் மனிதன் பாவம் செய்ததினால் கடவுளோடு உள்ள நல்லுறவையும், நித்திய ஜீவனையும் இழந்து விட்டான். இதனால் சாத்தானின் பிடியில் சிக்கி அழிவை நோக்கி வேகமாகச் சென்றுகெண்டிருந்தான். அவ்வாறு அழிந்துகொண்டிருந்த மனுக்குலத்தை மீட்பதற்காகத் தமது உயிரை கொடுத்து நம்மை மீட்டெடுத்திருக்கிறார். கிறிஸ்துவின் மீட்புத் திட்டத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு முக்கியமானது.

எப்படி இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு மீட்பைக் கொடுக்கிறது? பாவத்தினால் நம்மை சிறை பிடித்து வைத்திருக்கிறான் சாத்தான். அதனால் நாம் சாத்தானுக்கு அடிமையாயிப்போனோம். பாவத்தின் சம்பளம் மரணம். ஆனால் நாம் மரிப்பதை ஆண்டவர்

விரும்புவதில்லை. ஏனெனில் கடவுள் நம்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறார். எனவே தமது ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலகத்தில் அனுப்பி நமது பாவத்தை அவர் ஏற்றுக்கொண்டு, நாம் பெறவேண்டியத் தண்டனையை நமக்குப் பதிலாக ஏற்றுக் கொண்டு சிலுவையில் மரித்தார். அடக்கமும் செய்யப்பட்டார். நிச்சயமாகவே இயேசு கிறிஸ்துவின் மரனம் சாத்தானுக்கு மகிழ்சியைக் கொடுத்திருக்கும்.

ஆனால் சாத்தானின் மகிழ்ச்சி நீண்ட நேரம் நீடிக்கவில்லை. மூடிய கல்லறையினாலோ, மரணத்தின் அதிபதியான சாத்தானாலோ இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பைத் தடுக்க இயலவில்லை. இயேசு கிறிஸ்து உயிரோடு எழும்புவதன் வழியாக மரணத்தைத் தோற்கடிக்கிறார். மரணத்தைத் தோற்கடிப்பதன் வழியாக மரணத்தின் அதிபதியான சாத்தானும் தோற்கடிக்கப்படுகிறான். எனவே இயேசு கிறிஸ்துவின் உயிாப்பு மரணத்தின் மீதும் சாத்தானின் மீதும் கிடைத்த வெற்றி.

இயேசு கிறிஸ்துவின் இந்த வெற்றி அவர் வழியாக முழு மனுக்குலத்திற்கும் கிடைக்கிறது. எப்படி முதல் மனிதனாகி ஆதாம் வழியாக இவ்வுலகில் பாவமும் மரணமும் முழு மனுகுலத்துக்கும் வந்ததோ, அதேபோன்று இரண்டாம் ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக மீட்பும், உயிர்ப்பும் முழு மனுக்குலத்துக்கும் கிடைத்தது. (1கொரிந்தியர் 15:45-49) உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வழியாக நாமும் உயிரோடு எழுப்பப்படுவோம் என்கிற நம்பிக்கையையும், மகிழ்சியையும் ஈஸ்டர் பண்டிகை நமக்குக் கொடுக்கிறது. உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து நம்மோடு இருந்து, நம்மை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

**மீட்பரின் பணியில்**
***திருமதி.ஜெபா சாமுவேல்***



# பெண்கள் பகுதி

## இயேசுவின் கல்லறையில் கேட்ட குரல்கள்

இயேசுவின் கல்லறை ஒரு வித்தியாசமான கல்லறையாகும்! வெள்ளிக்கிழமை சாயங்காலத்தில் அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட்டிராத தன்னுடைய புதிய கல்லறையில் இயேசுவை அடக்கம் பண்ணினான். பின்னர் பிரதான ஆசாரியர் மற்றும் பரிசேயரின் நிமித்தம் முத்திரை போட்டு, காவல் வைத்து, கல்லறை பத்திரப்படுத்தப் பட்டது! கல்லறைக்கு காவல் என்பது புதிதானது. வித்தியாசமானது. அதன் பின்பு கல்லறையை சுற்றி நிசப்தம். ஆனால் ஞாயிறு அதிகாலையில் கல்லறையில் கேட்டது மூன்று விதமான குரல்கள்.




**மகதலேனா மரியாளின் குரல் - அழுகையின் குரல்**

ஏழு பிசாசுகளிடமிருந்து இயேசுவின் மூலம் விடுதலை பெற்றவள் மகதலேனா மரியாள் (லூக்கா 8:2). இயேசுவை அடக்கம் பண்ணும்வரை கூடவே இருந்த மரியாள், வாரத்தின் முதல் நாள் காலையில், அதிக இருட்டோடே அவருக்கு சுகந்த வர்க்கமிடும்படி வருகிறாள். ஆனால் அவள் கண்டது கல் புரட்டப்பட்ட வெறுமையான கல்லறை (யோவான் 20:1). பின்பு சீஷர்களிடம் அறிவித்து விட்டு மீண்டும் வருகிறாள். அனைவரும் சென்று விட்டாலும் அவளுக்கு செல்ல மனமில்லை. இயேசுவின் சடலத்தை யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்கள் என்று நினைத்து கல்லறையினருகே நின்று அழுகிறாள். அறியாமையின் அழுகுரல் அது. இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற வேதவாக்கியத்தை அறியாதிருந்ததால் உண்டான அவிசுவாசம் மரியாளின் அழுகுரலுக்கு காரணமாயிற்று. இயேவின் மூலம் விடுதலை பெற்று இருந்தும், அவர் மரணத்தை ஜெயிக்கக்கூடியவர் என்பதை அறியாதிருந்தாள் மரியாள்.



**தேவதூதர்களின் குரல் - சுவிசேஷத்தின் குரல்**



***"உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதேன்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். அவர் கலிலேயாவில் இருக்கும் காலத்தில் சொன்னபடி மூன்றாம் நாளில் எழுந்திருந்தார்"*** (லூக்கா 24:5-7) என்று கல்லறையில் இருந்த இரண்டு தூதர்கள் கூறினார்கள். இயேசுவோடு இருந்தும் அவர் கூறிய சத்தியத்தை உணராதிருந்தவர்களிடம் விளக்கி கூறினார்கள் தேவதூதர்கள். அந்த தேவதூதர்களின் குரல் சுவிசேஷத்தை அறிவித்த குரலாகும்! பொதுவாக கல்லறையில் கேட்காத குரலது! அக்குரல் கலக்கத்துடனும் வேதனையுடனும் இருந்த பெண்களுக்கு தெளிவையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

**இயேசுவின் குரல் - அன்பின் குரல்**

தூதர்களின் சத்தத்தைக் கேட்டு பின்னாக திரும்பிய மரியாளைப் பார்த்து, ”ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்?” என்றார் இயேசு. ஆனால் மரியாள் அவரை இயேசு என்று அறியவில்லை. தோட்டக்காரன் என்று எண்ணி, ”ஐயா நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்கு சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன்” என்றாள். இயேசு அவளை நோக்கி: ”மரியாளே” என்றார் (யோவான் 20:14-16). அப்பொழுது தான் தன்னுடன் பேசிக் கொண்டிருப்பவர் இயேசு என்பதை உணர்ந்து ரபூனி என்றாள். பெயர் சொல்லி அழைத்தது இயேசுவின் குரல்! துக்கத்துடனிடருந்த மரியாளை தேடி வந்து பதில் கொடுத்த குரல் இயேசுவின் அன்பின் குரல்! அழுகையை களிப்பாக மாற்றினது பெயர் சொல்லி அழைத்த இயேசுவின் அன்பின் குரல்!



**நம்முடைய குரல் எப்படிப்பட்டதாயிருக்கிறது?**

- தேவன் நம் கையில் கொடுத்துள்ள வசனத்தை முழுமையாய் விசுவாசியாது, பிரச்சனைகளை கண்டு துவண்டு போனவர்களா நாம்? அப்படியானால், நம்முடைய குரலும் மகதலேனா மரியாளைப் போல அழுகுரலாகவே எழும்பும். அது யாருக்கும் பிரயோஜனமாயிராது. மாறாக இடறச் செய்யும்.
- உலகெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்ற இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறோமா நாம்? அப்படியெனில், நம் ஆண்டவர் இன்றும் உயிரோடிருக்கிறார். அவர் உங்கள் முன் போவார் என்று தேவதூதர்களைப் போல சுவிசேஷத்தை கூறும் குரலாக இருக்கும் நம் குரல்! கலக்கத்திலும், வருத்தத்திலும் வாழும் மக்களுக்கு நம்மூலம் சமாதானம் கிடைக்கும்.

அப்படி நம் குரல் சுவிசேஷத்தின் குரலாக மாறும்போது, பெயர் சொல்லி அழைக்கும் அன்பின் தேவனின் குரலை நாம் மட்டுமல்ல, நம்மை சுற்றியுள்ள அனைவரும் கேட்க முடியும். நமக்கு முன்னே உயிருள்ள ஆண்டவர் போகிறதை, நாம் ஒவ்வொரு நொடிப்பொழுதும் உணர முடியும்! நம்மை தேடி வந்து பெயர் சொல்லி அழைக்கிற இயேசுவின் அன்பில் குரல் எப்போதும் நம் காதுகளில் ஒலிக்கட்டும்!

**ஜெபசீலி ஆசீர்**



## வேதாகமப் பெண்கள்

**உங்கள் மணவாளனை சந்திக்க ஆயத்தமா?**
**(விழித்திருந்த புத்தியுள்ள ஸ்திரீகள்)**
**மத்தேயு 25:1-13**

இது இயேசுகிறிஸ்து தமது இரண்டாம் வருகைக்கு (watchfulness) ஆயத்தமாயிருக்கும்படி கூறின ஒரு உவமை. முதல் தடவையைப் போலல்லாமல் அவர் மறுபடியும் வரும்போது நம்மையும், தமது சபையையும் என்றென்றைக்கும் தம்மோடிருக்கும்படி எடுத்துக்கொள்வர். இங்கு இயேசு பத்து கன்னிகைகளில் ஐந்து பேர் மட்டும் புத்தியுள்ளவர்களாயிருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். மணவாளன் வரத் தாமதமானபடியால் அவர்கள் எல்லாரும் தூங்கிவிட்டனர். நடு இரவில் அவர்கள் எழுப்பப்பட்டு, “இதோ மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள்” என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது புத்தியில்லாத ஐந்து கன்னிகைகளின் தீவட்டிகளும் அணைந்துபோகும் தருவாயில் இருந்தன. அவர்கள் தங்கள் விளக்குகளில் எண்ணெயை சுமந்து சென்ற புத்தியுள்ளவர்களிடம் சென்று தங்களுக்கும் கொஞ்சம் எண்ணெய் வேண்டும் என்று கேட்டார்கள். புத்தியுள்ளவர்களோ, அவர்களிடம் தங்கள் விளக்குகளுக்கு போதுமான அளவு எண்ணெய் மாத்திரம் இருப்பதாகக் கூறினர். புத்தியில்லாத ஸ்திரீகளோ கடைக்கு சென்று எண்ணெய் வாங்கி திரும்பி வரும் முன்பு, மணவாளனும் அவர்களோடிருந்தவர்களும், புத்தியுள்ள ஸ்திரீகள் ஐந்து பேரும் கலியாண அறைக்குள் பிரவேசித்து கதவும் அடைக்கபட்டது. புத்தியில்லாத ஐந்து ஸ்திரீகளும் திருமணத்தில் பங்குபெறும் வாய்ப்பினை இழந்தார்கள்.

இது யூதர்களின் திருமண முறையின் கண்ணோட்டத்தில் கூறப்பட்ட ஒரு உவமையாகும். பொதுவாக யூத வழக்கப்படி, அவர்கள் திருமண வைபவங்கள் சாயங்கால நேரங்களில் துவங்கி இரவு வேளைகளில் நடைபெறும். அதில் காலதாமதமும் ஏற்படலாம். பத்து கன்னிகைகளும் ஒரு குறிப்பிட்ட மணவாட்டியின்

தோழிகளாக இருந்தார்கள். ஐந்து பேர் ஆயத்தமுள்ளவர்களாக இருந்தபடியால் அவர்கள் புத்தியுள்ளவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களிடம் கூடுதல் எண்ணெய் இருந்தது.

**நமது நித்திய மணவாளனாகிய கர்த்தரை சந்திக்க்க நாம் ஏன் ஆயத்தமாயிருக்க வேண்டும்?**

இந்த உலகம் மிகவும் அநித்தியமானது. நாம் நித்திய நித்தியமாய் நம் இரட்சகரிடம் சென்று வாழ வேண்டியவர்கள். நமக்கு நித்திய வாழ்வு தரவே இயேசு இவ்வுலகில் வந்தார். அவரோடு என்றென்றும் சென்று வாழத்தக்கதான ஒரு வாழ்வை நாம் வாழவேண்டும்.

நாம் இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளையோ, நேரத்தையோ அறியாதபடியினால் அவர் வருகைக்கு எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டும். இரட்சிப்பின் உடை அணிந்து கரைதிரையற்ற ஒரு வாழ்வு வாழ வேண்டும். நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணவே அவர் பரலோகம் சென்றிருக்கிறார். கர்த்தர் வந்து தமது சிறப்பானதை அவரோடு கொண்டு செல்வார். அவரோடு பரலோகம் செல்வதற்கு நமது தனிப்பட்ட வாழ்வின் ஆயத்தங்களை தவிர வேறெதுவும் உதவி செய்ய முடியாது. எனவே விழிப்போடிருந்து ஆயத்தப்படுவது நமது கடமையாகும். இந்த ஆயத்தத்தை கடைசி நிமிடத்திற்கு மாற்ற வைக்கவும் முடியாது. ஏனெனில் அதற்கான வாய்ப்பு அறவே கிடைக்காமல் போய்விடலாம். கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து விழிப்புடன் இருக்க கிருபை செய்வாராக!

**ஷர்மிளா ராஜேஷ்**



# CHILDREN'S CORNER

Dear Children,



The theme this April is "**RISEN JESUS**".

Jesus says, "I am the resurrection and the life" in John 11:25,

HE died by crucifixion on Friday and rose from his tomb (resurrected) to New life, three days later, on Sunday (Easter) morning.

Jesus was the first person to be resurrected. Many people saw Jesus after He was resurrected.

Jesus showed the disciples His nail pierced hands. He told his disciple Thomas to touch His hand, so that they would know that His resurrected body had flesh and bones. We celebrate Easter each year to help us remember that Jesus rose again.

## Because He Lives...




1. **Our sin is forgiven -** It was Jesus' resurrection that proves that He was the perfect sacrifice. Our sin is forgiven, in Christ.
2. **Sin has no hold on us –** We were once slaves to sin. But through his resurrection, Jesus shows us that he is the winner over sin and death.
3. **Death is not the end -** Just like Jesus, we will be resurrected.
4. **We have a Hope for our Future -** Jesus' resurrection created the way for him to go and create our future home.
5. **We can face tomorrow –** And every day after, because we have a Risen Jesus walking by our side.

**IF YOU STILL WONDER –**

## DID JESUS REALLY LIVE AGAIN?

**Listen to this Song...**

**https://www.youtube.com/watch?v=pBAU9OT0z28&t=63s**

# HOLY WEEK

The Holy Week, also known as the Passion Week, is the week before Easter. The Holy Week recounts the final days of Jesus' life on this earth including his Death, Burial, and Resurrection.



## PALM SUNDAY

A celebration of Jesus fulfilling the prophecy from Zechariah with his triumphal entry into Jerusalem. We celebrate Christ as King .



## MAUNDY THURSDAY

Maundy Thursday honors the Last Supper that Jesus had with His disciples. Churches celebrate Maundy Thursday by taking Communion.



## GOOD FRIDAY

Good Friday is marked by reflections on the death of Christ. When we meditate on what Jesus did for us, we are reminded of Jesus' suffering.



Jesus experienced the ultimate separation from God so that we will never have to experience that.






## EASTER SUNDAY


The Holy Week leads up to the celebration of Jesus' triumph over death on Easter Sunday.

The Resurrection gives us hope that one day we will also have eternal life with God!

## SAYING IT WITH PICTURES…




After his suffering, he showed himself to these men and gave many convincing proofs that he was alive. He appeared to them over a period of forty days and spoke about the kingdom of God. — Acts 1:3 NIV




having been buried with him in baptism, in which you were also raised with him through your faith in the working of God, who raised him from the dead. – Colossians 2:12 NIV


## NAMES OF GOD #4 JEHOVAH-SHALOM

Check out the short video below

Jehovah-Shalom means – "The Lord is Peace"

Interestingly, when Isaiah prophesied about Jesus, he said that Jesus would be our "Prince of Peace" (Isa. 9:6).

When Jesus met with the disciples on the evening of the first day of the week, the day in which He resurrected, his first words are "Peace be with you."




To show them He was Himself, and probably to calm them down, He showed them His nail-pierced hands, and side, and the scars He still bore.

**Daily Application** - Jesus is our Peace, and we are told in the Bible to "be anxious for nothing," but in every situation by prayer and petitions with thanksgiving to present our requests to God.

And, we're promised, "The peace of God, which surpasses all understanding, will guard your hearts and minds through Christ Jesus" (Philippians 4:6-7).

## TINY TOTS SECTION

### COLOR IN...




Jesus Christ Is Risen

## ALELLUIA!! JESUS IS RISEN!!

## WE NEED TO TELL THE WHOLE WORLD ABOUT IT!!

**These children are looking at the World Globe and wondering where to start…**
**Could you help find the hidden items below…**






# Jesus Helps the Disciples Understand Scripture

After Jesus died, He suddenly appeared before His disciples. They were frightened.

Finish drawing the frightened faces.



Jesus told them about things written in the Bible.

Match the pictures with their shadows.






Jesus showed His disciples His hands and feet. He ate a piece of fish. Then they knew He was not a ghost.

Finish the pattern by drawing the missing items in the boxes below.






The disciples would see all these things. They would be witnesses.


Circle the letters. w i t n e s s e s

e p d t q b i





s y n x z w e h s o k s



Enter your SECRET CODE to unlock games @ games.childrensbulletins.com

SECRET CODE PM8117

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – "THE RISEN JESUS"

1. Who was the first person to see the risen Jesus? (John 20: 14 – 16)

a. Peter
b. John
c. Mary Magdalene
d. Thomas

2. What did Jesus first say to His disciples, after his resurrection? (John 20:19)

a. Peace be with you
b. Repent, and be saved
c. Be healed
d. Do not sin anymore

3. Which disciple doubted Jesus' resurrection until he saw Him with his own eyes?

a. Peter
b. John
c. Judas
d. Thomas

4. Who rolled away the stone from the tomb's entrance? (Matt. 28:2)

a. The Roman Guards
b. Peter and John
c. Mary Magdalene
d. An Angel of the Lord

5. What did the angel say to the women at the tomb? (Luke 24:5-6)

a. "Go, and Tell Peter"
b. "He is not here, He is Risen"
c. "Why are you Crying"
d. "Don't touch the Tomb"

6. Who did Mary mistake Jesus as, when she saw him on Easter day? (John 20:15)

a. An Angel
b. Roman Soldier
c. Gardener
d. Fisher Man

7. Who ran to the tomb after hearing Mary Magdalene's report? (John 20:3-4)

a. Peter and John
b. James and Thomas
c. Andrew and Simon
d. Paul and Mark

8. Who reached the tomb first but didn't enter? (John 20:5)

a. Peter
b. Thomas
c. John
d. James

9. What did Jesus eat to prove He was not a ghost? (Luke 24:41-43)

a. Fish and honeycomb
b. Bread and Wine
c. Fig and Olives
d. Manna from Heaven

10. On the road to Emmaus, how did Jesus reveal Himself? (Luke 24:30-31)

a. By quoting Scripture
b. By breaking bread
c. By performing a miracle
d. By calling their names

11. What did Jesus tell Peter three times after His resurrection? (John 21:15-17)

a. Go and Preach
b. Feed my Sheep
c. Do not be afraid
d. Follow Me

12. On which day, after he died, did Jesus rise again?

a. First
b. Second
c. Third
d. Fourth

## Clearing the Confusion

Unscramble the following words to discover an important word that describes Jesus.


DGEAERNR ⓞ_ _ _ _ _ _ _ – a person who cares for a garden

SNALGE _ _ _ _ ⓞ_ – created beings whose only job is to serve and worship God

DLSSIPEIC _ⓞ_ _ _ _ _ _ _ – the people Jesus called to follow Him on earth

EIBEVLE _ _ _ _ _ ⓞ_ – to accept something as true

YMEPT ⓞ_ _ _ _ – containing nothing



## What Did She Say?

Decode the message from Mary.

⚄   ⚃ ⚀ 6 ⚂   4 ⚂ ⚂ 1   5 ⚃ ⚂   ⚅ 2 3 ⚁

KEY:

| A | D | E | H | I | L | N | O | R | S | T | V |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ⚀ | ⚁ | ⚂ | ⚃ | ⚄ | ⚅ | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |

## What's Missing? | Identify the six items from the first picture that are missing in the second picture.





## True or False | Circle the letter to indicate if the statement is true or false. Then write out the circled letters to discover a command Jesus gave to Thomas.

**Thomas,**

_ _ _ _ _ _ _ _ !

| True | False | |
|---|---|---|
| B | A | Jesus said the Bible is all about Him. |
| E | R | The disciples thought Jesus was a ghost. |
| S | L | John was missing when Jesus appeared. |
| U | I | The disciples were afraid of the Greeks. |
| E | C | Jesus ate fish. |
| V | T | Jesus told the disciples to teach about Him. |
| D | E | The disciples gathered on the last day of the week. |

# HOW IT HAPPENED…

## The Perfect Fit

Circle the word that belongs in each sentence.

The governor's soldiers made a crown of ______ and put it on His head. **(flowers / thorns)**

Then they mocked Him: "Here is the ______ of the Jews!" **(boss / King)**

The ______ nailed Jesus to a cross. **(soldiers / criminals)**

Jesus cried out, "My God, why have You ______ Me?" **(laughed at / forsaken)**

One of the men guarding Jesus' body said, "This man really was God's ______!" **(Son / enemy)**

On the third day, Mary Magdalene and the other Mary went to the ______. **(garden / tomb)**

An angel of the Lord rolled back the stone and ______ on it. **(sat / spat)**

The angel spoke to the women, "Jesus is not here. He has ______." **(died / risen)**

Just then Jesus greeted them. "Don't be ______," Jesus told them. **(afraid / mad)**

Jesus appeared to more than ______ people who followed Him. **(500 / 5 million)**

Jesus is ______! **(missing / alive)**

## Spot the Differences in Jesus Is Alive!

Compare the picture on the top with the picture on bottom. Circle the 13 things that are different








# MISSIONARY JOURNEY

## APOSTLE # 4 JOHN




John the Apostle is the brother of the Apostle James and, like his brother, was also a fisherman.


Later, his passion and zeal for truth, tempered with love from being with Jesus.

John was part of Jesus' "inner circle", with Peter and James.

He wrote the Gospel of John, the books of 1 John, 2 John, 3 John, and The Revelation.

According to tradition, John was thrown into a cauldron of boiling oil, which he miraculously survived. He was then banished to the island of Patmos (in Greece). He died a very old man, the only Apostle to do so.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...




1. The theme for the month of April is: _______________________________.
2. Jehovah Shalome means "___________________________."
3. _____________ was one of Jesus' "inner circle".
4. John 11:25 says - ____________________________________________________________
5. Some important days during the Holy week - ___________________________; ___________________________; ________________________; ______________________;
6. John wrote the________________, the books of____________________, and _______________________________while jailed on the Island of Patmos.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan**

# Answers to March Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – WOMEN OF BRAVERY AND COURAGE

1. b. Rahab
2. d. Esther
3. b. Jochebed
4. b. Ruth.
5. a. Abigail
6. c. Miriam
7. d. Jael.
8. a. Mary
9. c. Joanna
10. c. Lydia
11. a. Lois
12. b. Two

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

7. The theme for the month of March is: **Women**.
8. EL - ROI means "**The God who sees**."
9. Ps. 139:14 says - **I will praise You, for I am fearfully and wonderfully made; marvelous are Your works, and that my soul knows very well.**
10. **James** was one of Jesus' "inner circle", with Peter and John.
11. The Lenten season begins on **Ash Wednesday** and ends the day before **Easter**_.
12. Amy opened an **orphanage** and founded **a mission** in **Dohnavur.** She served in India for **55** years and wrote **35** books about her work as a missionary.

***Note : Submit the hard copy of the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1.நித்திய ஜீவன் எது?

2. நித்திய ஜீவனாயிருக்கிறது எது?

3. நித்திய ஜீவன் யார் ?

4. நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணினவர் யார்?

5. நித்திய மகிமைக்கு அழைத்தவர் யார்?

6. நித்திய ஜீவனை தந்தது யார்?

7. நித்திய ஜீவனை அறுப்பவன் யார்?

8. நித்திய ஜீவனை அடையப்போவது யார்?

9. நித்திய வீடு எங்கு உள்ளது?

10. நித்திய பிரதான ஆசாரியர் யார்?

11. நித்திய ஜீவன் யாருக்கெல்லாம் உண்டு? ஐந்து பதில்கள் எழுதுக.

மே மாத தலைப்பு

**தெய்வீக அன்பு**

***Divine Love***

## மார்ச் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

### வேதாகமத்தில் பெயர் பதிவு செய்யப்பட்ட பெண்களின் பெயர்கள் :

**ஆதியாகமம்**
1.ஏவாள் 3:20
2.ஆதாள் 4:19
3.சில்லாள் 4:19
4.நாமாள் 4:22
5.சாராய்/ சாராள் 11:29, 17:15
6.மில்க்காள் 11:29
7.இஸ்காள் 11:29
8.ஆகார் 16:1
9.ரேயுமாள் 22: 24
10.ரெபெக்காள் 24:15
11.கேத்தூராள் 25:1
12.யூதீத் 26:34
13.பஸ்மாத் 26:34
(ஏலோலின் குமாரத்தி)
14.மகலாத் 28:9
15.ராகேல் 29:6
16.லேயாள் 29:16
17.சில்பாள் 29:24
18.பில்காள் 29:29
19.தீனாள் 34:1
20.தெபொராள் 35:8
21.ஆதாள் 36:2
22.அகோலிபாமாள் 36:2
23.பஸ்மாத் 36:3
(இஸ்மவேலின் குமாரத்தி)
24.திம்னாள் ஆதி 36.22
(லோத்தானின் சகோதரி)
25.திம்னாள் 36:12
(எலீப்பாசுவின் மறுமனையாட்டி)
26.மக்ரேக் 36:39
27.மெகேதபேல் 36:39
28.தாமார் 38:6
29.ஆஸ்தாத் 41:45
30.செராக்கு 46: 17

**யாத்திராகமம்**
31.சிப்பிராள் 1:15
32.பூவாள் 1:15
33.சிப்போராள் 2:21
34.யோகெபேத் 6:20
35.எலிசபாள் 6:23
36.மிரியாம் 15:20

**லேவிபராகமம்**
37.செலோமித் 24:11

**எண்ணாகமம்**
38. அபியாயேல் எண். 3:35
(சூரியேலின் தாய்)
39. கஸ்பி 25:15
40.மக்லாள் 26:33
41.நோவாள் 26:33
42.ஒக்லாள் 26:33
43.மில்காள் 26 33
44.திர்சாள் 26:33
45.சாராள் எண் 26.46
(ஆசேரின் குமாரத்தி)

**யோசுவா**
46.ராகாப் 2:1
47.அக்சாள் 15:16

**நியாயாதிபதிகள்**
48.தெபொராள் 4:4
49.யாகேல் 4:17
50.தெலீலாள் 16:4

**ரூத்**
51.நகோமி /மாராள் 1:1&1:20
52.ஒர்பாள் 1:4
53.ரூத் 1:4

**1சாமுவேல்**
54.அன்னாள் 1:2
55.பெனின்னாள் 1:2
56.மேரப் 14:49
57.மீகாள் 14:49
58.அகினோவாம் 14:50
(சவுலின் மனைவி)
59.அபிகாயில் 25:3
60.அகினோவாம் 25:43
(தாவீதின் மனைவி)

**2சாமுவேல்**
61.மாக்காள் 3:3 (தல்மாயின்குமாரத்தி)
62.ஆகீத் - 3:4 (1நாளா3.2)
63.அபித்தாள் 3:4 (1நாளா3.3)
64.எக்லாள் - 3:5 (1நாளா3.3)
65.ரிஸ்பாள் - 3:7
66.பத்சேபாள் 11:3
67.தாமார் 13:1 (தாவீதின் மகள், அப்சலோமின் சகோதரி)
68.தாமார் 14:27
(அப்சலோமின் குமாரத்தி)
69.அபிகாயில் 17:25
(நாகாசின் குமாரத்தி, செருயாவின் சகோதரி யோவா பின் அத்தை)

**1இராஜாக்கள்**
70.அபிஷாக் 1:3
71.தாபாத் 4:11
72.பஸ்மாத் 4:15 (சாலொமோனின் குமாரத்தி)
73.தாப்பெனேஸ் 11:19
74.செரூகாள் - 11:26
75.நாமாள் 14:21
(ரெகொபெயாமின் தாய்)
(2 நாளாகமம் 12:13)
76.மாகாள் 15:2 (அப்சலோமின் குமாரத்தி)
77.யேசபேல் 16:31 (ஏத்பாகாலின் குமாரத்தி)
78.அசுபாள் 22:42 (2நாளா.20:31)

**2இராஜாக்கள்**
79.அத்தாலியாள் 8:26
(2 நாளாகமம் 22:2)
80.யோசேபாள் 11:2
81.சிபியாள் 12:1 (2நாளா.24:1)
82.யொவதானாள் 14:2 (2நாளா. 25:1 யோவதானாள்)
83.எக்கோனியாள் 15.2 (2நாளா. 26: 3)
84.எருசாள் 15:33
(2 நாளாகமம் 27:1)
85.ஆபி 18:2
(2நாளாகமம் 28:1 அபியாள்)
86.எப்சிபாள் 21:1
87.மெசல்லேமேத் 21:19
88.எதிதாள் 22:1
89.உல்தாள் 22:14
90.அமுத்தாள் 23:31,24:18
(எரேமியா 52:1 அமுத்தாள்)
91.செபுதாள் 23:36
92.நெகுஸ்தாள் 24.8

**1 நாளாகமம்**
93மாத்திரேத் 1நாளா.1:50
94.செருயாள் 2:16
95.அபிகாயில் 2:16
(ஈசாயின் மகள், தாவீதின் சகோதரி)
96.அசுபாள்/ எரீயோத் 2:18
97.எப்ராத் 2:19
98.அபியாள் 2:24 (எஸ்ரோனின் மனைவி)
99.அத்தாராள் 2:26
100.அபியாயேல் 2:29
101.அக்லாய் 2:31
102.எப்பாள் 2:46
103.மாகாள் 2:48 (காலேபின் மறுமனையாட்டி)
104.பத்சுவாள் 3:5

105.செலோமீத் 3:19
(செருபாபேலின் குமாரத்தி, மெசுல்லாம் , அனனியாவின் சகோதரி)
106.அத்செலெல் போனி 4:3
107.ஏலாள் 4:5
108.நாராள் 4:5
109.மிரியாம் 4:17 (மேரேத்தின் பெண்ஜாதி)
110.எகுதியாள் 4:18
111.பித்தியாள் 4:18
112.ஒதியா 4:19
113.மாக்காள் 7:15
(உப்பீம், சுப்பீ மின் சகோதரி)
114.அம்மொளெகேத் 7:18
115.சேராள் 7:24
(எப்பிராயீமின் மகள்)
116.சேராள் 7:30 (ஆசேரின் குமாரத்தி)
117.சூகாள் 7:32
118.பாராள் 8:8
119.ஊசிம் 8:8
120.ஒதேசால் 8:9
121.மாக்காள் 8:29
(கிபியோனின் மூப்பனுடைய பெண்ஜாதி)

**2நாளாகமம்**

122.மகலாத் 11:18
123.அபியாயேல் 11:18
(ஈசாயின் குமாரனாகிய எலியாபின் குமாரத்தி )
124.செனோமித்11:20
(ரெகொயெயாமின் குமாரத்தி)
125.மிகாயாள் 13:2
126.சீமாத் 24:26
(2இராஜா.12:21
சிமியாத்)
127.சிம்ரீத் 24:26

**நெகேமியா**

128.நொவதியாள் 6:14

**எஸ்தர்**

129.வஸ்தி 1:9
130.எஸ்தர்/அத்சாள் 2:7
131.சிரேஷ் 5:10

**யோபு**

132.எமீமாள் 42:14
133.கெத்சீயாள் 42:14
134.கேரேனாப்புக் 42:14

**எசேக்கியல்**

135.அகோலாள் 23:4
136.அகோலிபாள் 23:4

**ஓசியா**

137.கோமர் 1:3
138.லோருகாமா 1:6

**மத்தேயு**

139.மரியாள் 1:16
(இயேசுவின் தாய்)
140.மகதலேனா மரியாள் 27:56
141.மரியாள் (யாக்கோபுக்கும் யோசேக்கும் தாய்)
142.ஏரோதியாள் 14:3

**மாற்கு**

143.சலோமே 15:4

**லூக்கா**

144.எலிசபெத்து 1:5
145.அன்னாள் 2:36 (பானுவேனின் குமாரத்தி - தீர்க்கதரிசி)
146.யோவன்னாள் 8:3
147.சூசன்னாள் 8:3
148. மார்த்தாள் 10:38
149. மரியாள் 10:39 (மார்த்தாளின் சகோதரி, பெத்தானியா ஊரைச் சேர்ந்தவள்)

**அப்போஸ்தலர்**

150.சப்பீராள் 5:1
151.கந்தாகே 8:27
152.தபீத்தாள்/தொற்காள் 9:36
153.மரியாள் 12:12
(மாற்கு/யோவானுடைய தாய்)
154.ரோதை 12:13
155.லீதியாள் 16:1
156.தாமரி 17:34
157.பிரிஸ்கில்லா 18:2
158.துருசில்லா 24:24
159.பெர்னீக்கேயாள் 25:13

**ரோமர்**

160.பெபேயாள் 16:1
161.மரியாள் 16:6
(பிரயாசப்பட்டவள்)
162.பெபேயாள் 16:1
163.யூனியா 16:7
164.திரிபேனாள் 16:12
165.பெர்சியாள் 16:12
166.யூலியாள் 16:15
167.ஒலிம்பா 16:15

**1கொரிந்தியர்**

168.குலோவேயாள் 11:11

**பிலிப்பியர்**

169.எயோதியாள் 4:2
170.சிக்கிக்கேயாள் 4:2

**2தீமோத்தேயு**

171.லோவிசாள் 1:5
172.ஐனிக்கேயாள் 1:5
173.கலவுகியாள் 4:21

**பிலேமோன்**

174. அப்பியாள் 1:2

**வெளிப்படுத்தின விசேஷம்**

175.யேசபேல் 2:20 (தன்னை தீர்க்கதரிசியென்று சொல்பவள்)

**பெண் தெய்வங்கள்**

176.அஸ்தரோத் -
1இராஜா.11:5,33
(சீகோனியரின் தேவி )
177.தியானாள் அப்.19:27
(மகாதேவி)- 4:2

## மார்ச் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Ajita Ebi
2. Mrs.Annie Rosita
3. Mrs.Blessy Lipny
4. Mrs.Desigta Jaison
5. Mr.Emmanuel
6. Mrs.Esther Pauline Rani
7. Mrs.Febell Jeevagi Thomas
8. Mrs.Geetha kannan
9. Mrs.Grace shekar
10. Mrs.Helen Sharmila Ray
11. Mr.Jeba Jino
12. Mrs.Jasmine Sobha
13. Mrs.Jebaseeli Asir
14. Mrs.Jenila Gannraj.L
15. Mrs.Kishi Maher
16. Mrs.Manuel Sarah
17. Mrs.Praveena Arun
18. Mrs.Nandhini Rajkumar
19. Mr.Prawin Durai Sam
20. Mrs.Priya Ranjith Kumar
21. Mrs.Persis John
22. Mr.Salin Robert
23. Mrs.Sheeba Merlin
24. Mrs.Sheeba Herlin
25. Mrs.Sheneegah Stanly
26. Mrs.Sharmila Rajesh
27. Mr.Selva Shaji
28. Mrs. Subija Jino
29. Mrs.Sweetilin Frank
30. Mrs. shobana Milton
31. Mrs.Peppin Jenson
32. Mrs.Valentine Sharmila Paul
33. Mrs. Suni Smila Edwin
34. Mrs. Malar Ernast
35. Mrs. Shajeethe Graly
36. Mrs. Vithya Dinesh
37. Mrs. Jini Jose
38. Mrs.Selvi George
39. Mr.Raja Guru
40. Mr.Jo Ernast
41. Mrs.Jasmin Manuel
42. Mrs.Padma Brin
43. Mrs.Goldina Thatcher
44. Mrs. ThukilajanJohnson
45. Mrs.Hame RajaGuru

## Children who answered March – 2025 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Brightson Timothy Raj
4. Benson Immanuel Raj
5. Clement Dave
6. Daniel Vanya (RUWAIS)
7. Danion Lemuel
8. Evelyn Gracia
9. Gabrilyn Hannah
10. Giana Elin
11. Hadriel Adventier
12. Janey Titus
13. Jarick Aaron
14. Jaslin Shanna
15. Jaylan Paul Jino
16. Joanna Paul Jino
17. Johanan Paul Jino
18. Jerilyn Pushpam Nelson
19. Jevlyn Ana
20. Jeya Jehosheba Maher
21. Jeya Joshua Maher
22. Jim Scott
23. Jen Scudd
24. Jeffrey Samuel
25. Jenessa Johnson
26. Joel Abrakam
27. Joha Anit Manuel
28. Johan Sam Manuel
29. Kathryn Joan
30. Kev Shannen P.S
31. Liana Erin
32. Leona Juliet
33. Leonel I.J. Stalin
34. Linuel I.J. Sherwyn
35. Nijolin Jose
36. Rivqah Deby Rajkumar
37. Sam Jesvin Vincent
38. Starlyne Noble
39. Steffi Priscilla .R
40. Yedidiah Arun (Ruwais)
41. Yovaan jairus (Ruwais)
42. Evanlya Sherin
43. Jabree Aaron
44. Eion Jayden
45. Diuas Dinesh
46. Defina
47. EricJayden Seniors
48. Janessa Max
49. Jenilin Jose
50. Evangelia Sharon
51. Efrona
52. Darion Lemuel
53. Jessica Eban
54. Sherlyn Sana
55. Mishael Wesley
56. Alston Elvin
57. Evaniya Sherin
58. Effrin
59. Camryn Robert

*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் எழுதிய விடைத்தாள்களை ஒப்படைக்கவும்.*



# இயேசுவின் சீடர் தோமா

*இந்தியாவின் அப்போஸ்தலர்*

## தோமாவின் அறிவியல் பூர்வமான ஞானம்

கட்டிட கலை வல்லுனரும், பல்வேறு அரண்மனைகளின் அமைப்புகளை தனது ஊழியப் பாதைகளில் ஏற்கெனவே கண்டு இருந்தவருமான தோமா, தன்னோடு கூட இருந்து, தன்னை வழி நடத்துகிற ஆலோசனைக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தனக்கு அருளிய ஞானத்தோடு அரண்மனையைக் கட்டுவதற்கான திட்டங்களைத் தீட்டினான்.

முதலாவது, அரண்மனை கட்டுவதற்கான இடத்தை முழுவதுமாக அளந்து, அவைகளை ஒவ்வொரு பகுதிகளாகப் பிரித்து, அரண்மனையின் வடிவமைப்பை வரைபடமாக வரைந்தார்.

அதன் பின்பு, அரசனிடம் அரண்மனை வடிவமைப்பின் அம்சத்தை பின்வருமாறு தோமா விளக்கினார். “அரண்மனையின் முக்கிய கதவுகள் அனைத்தும் சூரிய ஒளி உள்ளே வருமாறு கிழக்கை நோக்கி அமைய வேண்டும். காற்று உள்ளே வரத் தக்கதாக ஜன்னல்கள் மேற்கு நோக்கி அமைய வேண்டும். சமையலறை தெற்கு நோக்கியும், அரண்மனையின் முழுத் தேவைக்கான தண்ணீர் வருவதற்கான வாய்க்கால் வடக்கு நோக்கி அமைய வேண்டும். சமையலறை தெற்கு நோக்கியும், அரண்மனையின் முழுத் தேவைக்கான தண்ணீர் வருவதற்கான வாய்க்கால் வடக்கு நோக்கி அமைய வேண்டும். அரண்மனையின் முன் பகுதியில் புல் தரையோடு கூடி பூச் செடிகள் மற்றும் அழகிய மரங்கள் நடப்பட வேண்டும்” என்று கூறினார்.

அதைக் கேட்டு மகிழ்ந்த அரசன், தோமா வரைந்த அரண்மனைக்கான வரை படத்தையும், அவருடைய தொழில் நுட்ப அறிவையும், மதி நுட்பத்தையும் கண்டு வியந்ததோடு, அவரைப் பாராட்டி ஏராளமான வெகுமதிகளைக் கொடுத்தான்.

## ஏழை எளியோரின் மீது தோமாவின் அக்கறை!

மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த வெகுமதிகளைப் பெற்றுக்கொண்ட தோமா, அவைகளில் சிலவற்றை மட்டும் தன்னுடைய அத்தியாவசியத் தேவைக்காக உபயோகித்தார். மீதியை மற்ற ஏழை எளியவர்களுக்கும், விதவைகளுக்கும், ஆதரவற்றோருக்கும் கொடுத்தோடு, அவர்களுடைய வாழ்க்கையில் சுவிசேஷ ஒளியை ஏற்றி, அவர்களை கர்த்தருக்குள் வழி நடத்தினார். அனேகரை பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவித்தார். அனேக வியாதியஸ்தர்களை சுகமாக்கினார்.

## தோமாவின் எளிய வாழ்க்கை முறை!

“தோமா, அதிகமான நேரங்களை உபவாசமிருந்து ஜெபிப்பதிலேயே செலவிட்டார். அவரிடத்தில் ஒரே ஒரு மாற்று உடைதான் இருக்கிறது! தனக்கென்று எதையுமே அவர் சேர்த்து வைத்துக் கொள்ளவில்லை! மிகவும் எளிமையான மனிதராகவும், அனைவரிடமும் அன்போடு பழகும் நீதிமானாகவும் காணப்படுகிறார்! பொதுவாக ரொட்டியை சாப்பிட்டுக் கொண்டு தண்ணீரை மட்டுமே அருந்தி வாழ்கிறார்! எந்தவொரு மனிதரிடத்திலிருந்தும் எந்தவித உதவியையும் ஏற்றுக் கொள்ளாதவராக வாழ்கிறார்!” என்று அரசனின் சிநேகிதர்கள் தோமாவைப் பற்றி அவரிடத்தில் விவரித்து சொன்னபோது, அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டான்.

“பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்” மத்தேயு 6:19 என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளைப்படியே தோமா வாழந்தார்.

## அரசனின் சகோதரன் உயிரோடு எழும்பிய அற்புதம்

ஒருநாள், அரசனாகிய கொந்தபோரஸின் சகோதரன், திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்து போனான். தோமா அவனுக்காக ஜெபித்தபோது, அவன் உயிரோடு எழும்பினான்! அதைக் கண்டு அனைவரும் மிகவும் ஆச்சரியப் பட்டார்கள்.

உயிரோடு எழும்பிய அவன் அங்கு இருந்தவர்களை நோக்கி, “நான் மரித்து பரலோகத்திற்குச் சென்று இயேசு கிறிஸ்துவைப் பார்த்தேன்! பரிசுத்தவான்கள் அனைவருக்காக, உலகிலுள்ள எவராலும் கட்ட முடியாத அளவிற்கு விலையுயர்ந்த இரத்தினம் போன்ற கற்களால் அங்கு கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற மிகப் பிரமாண்டமான கட்டிடங்களை எல்லாம் நான் பார்த்தேன்! வார்த்தைகளால் விவரிக்க முடியாத அழகு நிறைந்த பரலோகத்தின் ஒவ்வொரு இடங்களையும் நான் சுற்றி பார்த்தேன்.

என் கரத்தைப் பிடித்து, என்னை வழி நடத்திச் சென்ற இயேசுகிறிஸ்து திடீரென என்னை விட்டு மறைந்து போனார். கண் இமைக்கும் நேரத்தில் நான் இந்த பூமியில் உங்கள் நடுவில் இருக்கிறேன். எனக்காக ஜெபித்த இவரைப் பார்க்கும்போது, பரலோகத்தில் நான் பார்த்த இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகவே இவரும் இருக்கிறார்” என்று சொன்னான்.

அவன் சொன்னதைக் கேட்ட அரசன் உட்பட அங்கிருந்த அனைவரும் ஆச்சரியப் பட்டதோடு, மிகவும் சந்தோஷத்தோடு இயேசுகிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தார்கள். அரசனும் அவனுடைய சகோதரனும் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள்.

**- தொடரும்**

# துணுக்குகள்

## பாடல் பிறந்த கதை



**என் அருள் நாதா [ பாமாலை 103 ]**
**When I survey the wondrous Cross**

**1. என் அருள் நாதா இயேசுவே**
**சிலுவைக் காட்சி பார்க்கையில்**
**பூலோக மேன்மை நஷ்டமே**
**என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.**

**2. என் மீட்பர் சிலுவை அல்லால்**
**வேறெதை நான் பாராட்டுவேன்?**
**சிற்றின்பம் யாவும் அதினால்**
**தகாததென்று தள்ளுவேன்**

**நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக. கலாத்தியர் 6 : 14**

இப்பாடலின் இரண்டாவது வரியாகிய, 'சிலுவைக் காட்சி பார்க்கையில்' என்பதில், 'பார்க்கையில்' என்பது ஆங்கிலத்தில், Survey என்றிருக்கிறது. இப்பதம் நிலத்தை அளப்பதைக் குறிக்கும். நிலத்தை அளப்பவன், நிலத்தின் இருப்பிடம், வடிவம், பரப்பு, எல்கைகள் முதலியவற்றைத் தன் கண்களினாலும், கருவிகளினாலும் தன் மனதில் அளந்து திட்டவட்டமாகக் கணிக்கவேண்டும். இதையே இப்பாடலை எழுதியவர் தன் மனதில் எண்ணியிருக்கலாம். கிறிஸ்தவர்களாகிய நாம், அருள்நாதர் உயிர்துறந்த கல்வாரிச் சிலுவைக் காட்சியை இவ்விதமாகவே ஆராயவேண்டும்.

சிலுவைக் காட்சியை நாம் நுட்பமாக ஆராயும்போது, நமது வாழ்க்கையிலுள்ள குறைகள் தென்படும். நமது சாதனைகளைக் குறித்து பெருமைபாராட்ட இடமிராது. மேலும், சிலுவைக்காட்சி வேதனை கொடுக்கும் ஒரு சின்னமாகத் தோற்றமளிக்கும். ஆண்டவரின் முகத்தில் முள்முடியினால் வடிந்த இரத்தம் பாய்ந்தோடுவதையும், கைகளிலும், கால்களிலும், ஆணிகளினால் பாய்ந்த இரத்தத்தையும் காண்கிறோம். கல்வாரிச் சிலுவை, 'பேரன்பும், துன்பும் கலந்தே பாய்ந்தோடும்' காட்சியையும் அளிக்கிறது. நாம் இன்னும் பாவிகளாயிருக்கையில், அவர் நம்மை நேசித்தார்.

ஆகவே, இச்சிலுவைக் காட்சியின் முன் நாம் தலைகுனிந்து, நம்மை அவருக்கு அர்ப்பணம் செய்ய ஏவப் படுகிறோம். சராசரங்கள் அனைத்தும் நமக்குச் சொந்தமாய் இருந்தாலும், அவை ஆண்டவரின் அன்புக்கு ஈடாகமாட்டா. இப்பாடலை எழுதிய ஐசக் வாட்ஸ் பண்டிதர் (Isaac Watts) 1674ம் ஆண்டு, ஜூலை மாதம் 17ம் தேதி, இங்கிலாந்தில் Southampton நகரில், ஒன்பது குழந்தைகளில் மூத்தவராகப் பிறந்தார். அவரது தந்தை ஓர் ஆசிரியர். Southampton நகரிலுள்ள சகல பரிசுத்தவான்கள் ஆலயத்தின் குருவானவர், ஐசக் வாட்சுக்கு லத்தீன், கிரேக்க, எபிரேய மொழிகளைக் கற்றுக்கொடுத்தார்.

1690ல் அவர் சுய ஆளுகைச் சபையைச் சேர்ந்த ஒரு வேதசாஸ்திரப் பயிற்சி நிலையத்தில் பயின்று, 1697ல் தமது இருபத்துநான்காவது வயதில், லண்டன் மாநகரில் ஒரு சுய ஆளுகைச் சபையின் போதகராகத் திருப்பணியாற்ற ஆரம்பித்தார். சில ஆண்டுகள் பணியாற்றியபின், அவரது உடல் நலம் குன்றியதால், திருப்பணியை விட்டு, 1714 முதல், ஹெர்போர்டுஷயரிலிருந்த தமது நண்பர், ஸர் தாமஸ் அபினியுடன் (Sir Thoma Abney) நிரந்தரமாகத் தங்கியிருக்க வேண்டிவந்தது.

அவர் குருவாகப் பணியாற்ற ஆரம்பித்தபோது, அக்காலத்திலிருந்த கிறிஸ்தவப் பாட்டுப் புத்தகங்களில் காணப்பட்ட பாடல்களில் அதிருப்தி அடைந்து, தாமே பல பாடல்கள் எழுதினார். இரண்டு ஆண்டுகளாக அவர் எழுதிய பாடல்களை, 'ஆவிக்குரிய பாடல்களும், ஞானப்பாட்டுகளும்' (Hymns and Spiritual songs) என்னும் பெயருடன் வெளியிட்டார். 'என் அருள்நாதா இயேசுவே' என்னும் இப்பாடல் கலாத்தியர் 6:14ம் வசனத்தின்பேரில், 1707ம் ஆண்டு எழுதப்பட்டது. பிரபல ஆங்கிலக்கவிஞரான மேத்யூ அர்னால்டு, இப்பாடலைப் பார்த்து, 'ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பாடல்களில் மிகச்சிறந்த பாடல்' எனப் போற்றியுள்ளார். தனது மரணப் படுக்கையிலும் இதையே கடைசியாகப் பாடி மகிழ்ந்தார்.

இப்பாடலுக்கு புகள்பெற்ற அமெரிக்க இசை வல்லுநரான லோவல் மேசன் "ஹாம்பர்க்" என்ற ராகத்தை அமைத்தார். எபிரேய தேவாலையத்தில் பாடும் பாடல் ராகத்தின் அடிப்படையில் இது அமைக்கப்பட்டது. லோவன் மேசன் "உம்மண்டை கர்த்தரே" போன்ற பிரபல பாடல்களுக்கு ராகம் அமைத்தவர்.



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – ஏப்ரல் 2025

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 4 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 6 | ஞாயிறு | 11.00 am – 1.00 pm | உபவாச ஜெபம் |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 8 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 11 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 13 | ஞாயிறு | 5.00 am – 7.00 am | குருத்தோலை ஞாயிறு ஆராதனை – St.Andrew's church |
| 15 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 17 | வியாழன் | 9.00 pm – 11.00 pm | கட்டளை வியாழன் ஆராதனை – St.Andrew's church |
| 18 | வெள்ளி | 8.00 pm – 11.00 pm | பெரிய வெள்ளி ஆராதனை – St.Andrew's church |
| 20 | ஞாயிறு | 5.00 am – 7.00 am | ஈஸ்டர் ஆராதனை |
| 22 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி - ஆயர் இல்லம் |
| 25 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 27 | ஞாயிறு | 8.00 pm – 9.00 pm | வாலிபர் கூடுகை |
| 29 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 30 | ஞாயிறு | 11.45 pm – 12.00am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# ஆராதனை பாடல்கள் – ஏப்ரல் 2025

| | |
|---|---|
| **04-04-25** | |
| பாமாலை – 6 | என் நெஞ்சமே நீ மோட்சத்தை |
| பாமாலை – 290 | நாங்கள் பாவப் பாரத்தால் |
| கீர்த்தனை – 142 & 153 | இரங்கும் இரங்கும் கருணைவாரி<br>இயேசுவே கிருபாசனப்பதியே |
| பாமாலை – 8 | தந்தாய் உம்மைத் துதித்தே |
| **11-04-25** | |
| பாமாலை – 21 | சேனையின் கர்த்தா |
| பாமாலை – 314 | வாழ்க சிலுவையில் வாழ்க |
| கீர்த்தனை – 163 & 172 | விந்தை கிறிஸ்தேசு ராசா<br>பாதம் ஒன்றே வேண்டும் |
| பாமாலை – 31 | கீழ் வான கோடியின் |
| **13-04-25 – குருத்தோலை ஞாயிறு** | |
| பாமாலை – 92 | ஓசன்னா பாலர் பாடும் |
| பாமாலை – 94 | தயாள இயேசு, தேவரீர் |
| கீர்த்தனை – 40 & 41 | பவனி செல்கின்றார் ராசா<br>ஓசன்னா பாடுவோம் |
| பாமாலை – 40 | மெய்ஜோதியாம் நல் மீட்பரே |
| **17-04-25 – கட்டளை வியாழன்** | |
| பாமாலை – 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை – 102 | இரத்தம் காயம் குத்தும் |
| கீர்த்தனை – 260 & 122 | அன்பரின் நேசம் ஆர்<br>வேறு ஜென்மம் வேணும் |
| பாமாலை – 212 | பகலோன் கதிர் போலுமே |
| **20-04-25 – உயிர்த்தெழுந்த திருநாள்** | |
| பாமாலை – 126 | இன்று கிறிஸ்து எழுந்தார் |
| பாமாலை – 123 | இப்போது போர் முடிந்ததே |
| கீர்த்தனை – 324 & 59 | யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்<br>ஆமென், அல்லேலூயா! |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| **20-04-25** | |
| பாமாலை – 22 | தூய, தூய, தூயா! |
| பாமாலை – 347 | தெய்வ ஆட்டுக்குட்டியே |
| கீர்த்தனை – 197 & 121 | கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே<br>உன்றன் சுயமதியே நெறி என்று |
| கீர்த்தனை – 173 | வாரும் ஐயா போதகரே |

## திருமறை பாட ஒழுங்குகள் – ஏப்ரல் 2025

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-04-25 | மனம் திரும்புதல் | 2 சாமு. 12:1-13 | அப். 9:1-16 | மத்தேயு 26:31-39 | - |
| 11-04-25 | சிலுவையும் சீடத்துவமும் | ஆதி. 26:12-33 | கலாத்தியர் 2:15-21 | மத்தேயு 16:21-27 | 92 |
| 13-04-25 | ஓசன்னா – கர்த்தாவே இரட்சியும் | சகரியா 9:1-12 | 1 தீமோ. 4:6-16 | லூக்கா 19:29-40 | - |
| 17-04-25 | கட்டளை வியாழன் | யாத். 12:1-17 | 1 கொரி. 11:23-34 | மத்தேயு 26:36-46 | - |
| 18-04-25 | பெரிய வெள்ளி | மத்தேயு 26:26-44 | | | - |
| 17-04-25 | இயேசுவின் உயிர்த்தெழுதல் | எரேமியா 37:1-14 | 1 கொரி. 15:20-28 | யோவான் 20:1-17 | - |
| 25-04-25 | பெலப்படுத்தும் உயிர்த்தெழுந்த கிறிஸ்து | யோபு 19:21-29 | அப். 3:11-16 | யோவான் 19:38-42 | 29 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 04-04-25 | நீதிமொழிகள் | 5 | Muroor |
| 11-04-25 | நீதிமொழிகள் | 6: 1-19 | Mussafah |
| 18-04-25 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 25-04-25 | நீதிமொழிகள் | 6: 20-35 | Tourist Club |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**




# BIRTHDAY - APRIL




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Ms. | Evangelia Sharon |
| 2 | Mr. | Benny Emmanuel |
| 3 | Ms. | Jaslin Shanna |
| 4 | Ms. | Jessica Eban |
| 4 | Master | Calvin Joseph M |
| 5 | Mrs. | Asha Kavin |
| 6 | Master. | Mosheh Ken Polanto |
| 6 | Mr. | Alson Benny Rogers |
| 7 | Master. | Clement Dave |
| 9 | Mr. | Shalin Justin Samuvel |
| 11 | Master. | Juan Nathaniel. V |
| 12 | Ms. | Jevlyn Ana. V |
| 12 | Mrs. | Ancy Mol G |
| 13 | Mr. | Charles Rajkumar |
| 13 | Mrs. | Vinita Joanna Titus |
| 13 | Mrs. | N. Vijayakumari |
| 14 | Mrs. | Celesty Leema |
| 14 | Master | Ashmil Shawn W S |
| 15 | Rev.Dr. | Samuel A |
| 15 | Mr. | Rajaguru Seker |
| 15 | Mrs. | Anbu J Kingsly |
| 15 | Baby. | Carolin Ashy |
| 15 | Mr. | Prince Trison |
| 15 | Mrs. | Karunya Sweetline S. |
| 15 | Mrs. | Kirubha |

# BIRTHDAY - APRIL




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 16 | Mrs. | Evangeline Rebecca |
| 16 | Baby. | Mark Jayden Godwin |
| 18 | Mr. | Aron T K |
| 18 | Mr. | Allen Joshua V |
| 18 | Mrs. | Kavitha |
| 18 | Mrs. | Ramya |
| 19 | Mrs. | Nissie Baba |
| 19 | Mr. | Joseph Immanuel Jamal James |
| 19 | Master. | Johanan Paul Jino |
| 20 | Baby | Sam Jeswin |
| 23 | Master | J.D.Jayson Joshua |
| 23 | Master | Shasswath D L |
| 23 | Mr. | Calvin David Kumar |
| 24 | Ms. | Jeyaseeli Rajam |
| 24 | Mr. | Raja. A.K |
| 25 | Mrs. | Gnana Selva Malar |
| 27 | Mrs. | Elphida Vinolin |
| 28 | Ms. | Karen Jane |
| 28 | Mr. | Lipny Gilbert |
| 28 | Dr. Mrs | Jenila Labi Labence |
| 29 | Ms. | Roshini Kanaga Sharon |
| 29 | Mr. | Praveen Sharon |
| 29 | Mrs. | Sharon Sushantha |
| 29 | Baby | Arlene Ruth |
| 29 | Mr. | Brin K S |

## WEDDING DAY – APRIL




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 14 | Mr. & Mrs. | Ramesh Prabahardhas |
| 18 | Mr. & Mrs. | Sunil Manuel Augustine |
| 20 | Mr. & Mrs. | Arun Jeya Singh |
| 24 | Mr. & Mrs. | Godwin Mohan |
| 29 | Mr. & Mrs. | Johanspher V |
| 29 | Mr. & Mrs. | Jayakaran Paul |

## VBS – 2025











# Women's Day Service





## Convention & Retreat














## Cricket Tournament




Happy
EASTER
HE IS RISEN INDEED